Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## ஸத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவியசரித்திரம்.

2-ம் பாகம்.

அத்தியாயம் 23.

மகாத்மாகாந்தி தமது அனுபவங்களை "யௌவன இந்தியா" பத்திரிகையில் எழுதி வருவதில், 2-வது பிரிவு 23-வது அத்தியாயம் பின் வருமாறு:—

குடித்தனம் பண்ணுவதென்றால் எனக்கது புதிதல்ல. ஆனால், பம்பாயிலும் லண்டனிலும் நான் நடத்திய குடித்தனத்திற்கும், நேட்டாலில் குடித்தனம் பண்ணியதற்கும் வித்தியாசமுண்டு. நேட்டாலில் நான் பாரிஸ்டர் தொழில்செய்ய வேண்டியிருந்ததோடு இந்தியரின் பிரதிநிதியாகவும் இருந்தேன். ஆகையால் அந்த அந்தஸ்துக்குத் தகுந்தாற்போல் வாழ வேண்டுவது அவசியமென்று எனக்குப்பட்டது. ஆகையால் ஒரு பிரபலமான விடத்தில், ஒரு சிறிய நேர்த்தியான வீட்டை அமர்த்திக்கொண்டேன். நாற்காலி மேஜை முதலிய உபகரணங்கள் ஏற்கெனவே அங்கிருந்தன. சாப்பாட்டு விஷயத்தில் ஆடம்பரமிருக்கிடையாது. ஆங்கில நண்பர்களும் எனது சகாக்களான இந்தியர்களும் அடிக்கடி வருவது வழக்கமாகையால், வீட்டுச் செலவு கொஞ்சம் அதிகமாகவேயிருந்தது.

ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு நல்ல சேவகன் அவசியம். ஆனால், எவனையும் சேவகன் என்ற முறையில் வைத்து நடத்த எனக்கு எப்போதுமே தெரியாது. ஒரு நண்பர் எனக்குத் துணையாக இருந்தார். என்னுடைய சமையல்காரன் கேவலம் வீட்டு வேலைக்காரனாயிராமல், வீட்டுக்காரரில் ஒருவனாக பாவிக்கப்படுவது வழக்கம். அது தவிர ஆபீஸ் குமாஸ்தாக்கள் அங்கேயே தாமதித்துக் கொண்டு என்னோடு சாப்பிடுவார்கள். குடித்தனம் நன்றாக நடந்துவந்தது. ஆனால் எந்த வாழ்விலும் விகாரமான, வருந்தத்தக்க சம்பவங்கள் நடக்காமலிருக்குமா? என்னுடைய துணைவரும் தோழருமாக இருந்தவரை நான் முற்றிலும் நம்பிவிட்டேன். அவர் அதிக புத்திசாலி; விசுவாஸமாயிருப்பார் என்று நினைத்தேன். ஆனால் ஏமாந்து போனேன். எனது ஆபீஸ் குமாஸ்தாக்களில் ஒருவரிடம் அவருக்கு அசூயையேற்பட்டு, அவருக்கு விரோதமாக சூழ்ச்சிகள் செய்யலானார். நான் அந்த குமாஸ்தாவிடம் அவநம்பிக்கைப்படும்படி இத்தோழர் செய்துவிட்டார். இதையறிந்த குமாஸ்தா ஆத்திரப்பட்டு, ஆபீஸிலிருந்து போய்விட்டார். எனக்கு வருத்தமாயிருந்தது. என் மனதுக்கு சாந்தியேற்படவில்லை. இதன் மத்தியில் சமையல்காரனுக்கு சில நாள் ரஜா வேண்டியிருந்தது. அவனுக்குப் பதிலாக இன்னொருவனை அமர்த்திக் கொண்டேன். அவன் போக்கிரியென்று பின்னிட்டுத் தெரிந்தது; ஆனால் அவனையும் ஒரு காரியத்துக்காக தெய்வம் என்னிடத்தில் அனுப்பியதென்று பிறகு நினைத்து ஆறுதலடைந்தேன். அந்த சமையல்காரன் வேலைக்குவந்து இரண்டு மூன்று தினங்களாவதற்குள், எனக்குத் தெரியாமல் இரகஸ்யமாக நடந்துவந்த சில ஊழல்களை என்னுடைய அறிவிப்புக்குக் கொண்டுவந்தான். இனி ஜாக்கிரதையாயிருக்கும்படி எனக்கு எச்சரிக்கைசெய்தான். நான் சுலபமாக எதையும் நம்புகிறவன். ஆனால் யோக்யமாயும் தாட்சண்யமில்லாமலும் நடந்து கொள்ளுகிறவன் என்று சமையற்காரனுக்குத் தெரியாது. அதையவன் ஒருநாள் தெரிந்துகொள்ள நேர்ந்ததும் நடுங்கிப்போனான். விஷயம் என்னவென்றால், ஒவ்வொரு நாளும் நான் ஆபீஸிலிருந்து மத்தியான போஜனத்திற்காக வீட்டுக்குப் போவது வழக்கம். ஒருநாள் மத்தியானம் 12மணிக்கு அந்த சமையல்காரன் ஆபீசுக்கு ஓடிவந்து "இந்தக்ஷணமே வீட்டுக்கு வாருங்கள். ஒரு அதிசயம்" என்றான். விஷயம் என்னவென்று கேட்டேன். அகாலத்தில் வீட்டுக்கு வரவேண்டிய காரணமென்னவென்று வினவினேன். "நீங்கள் இப்போது வராவிட்டால், பின்னிட்டு நீங்களே வருத்தப்படுவீர்கள்; நான் அதற்கு மேல் ஒன்றும் சொல்லப் போவதில்லை" என்று பதிலளித்தான். அவன் பிடிவாதமாயிருந்தது கண்டு, உடனே வீட்டுக்குப் போனேன். ஒரு குமஸ்தாவையும் அழைத்துச்சென்றேன். சமையல்காரன் முன்னே போனான். நேராக வீட்டு மெத்தைக்குச்சென்றேன். என்னுடைய தோழரென்று நான் ஏற்கனவே சொல்லியவருடைய அறையைக்காட்டி, "உள்ளேபோய்ப் பாருங்கள்" என்றான்.

கதவைத் தட்டினேன். பதில் இல்லை. வீடு அதிரும்படியான சத்தத்துடன் கதவை மறுமுறை தட்டினேன்; கதவு திறந்தது. உள்ளே ஒரு விபசாரியிருந்தாள். "வீட்டை விட்டு ஓடிப்போ; இனி இங்குவராதே" என்று ஆக்ஞாபித்தேன். பிறகு என்னுடைய தோழரைப்பார்த்து "இந்த நிமிஷம் முதல் உங்களுக்கும் எனக்கும் ஒரு சம்பந்தமுமில்லை; நான் மோசம போய் விட்டேன்; உங்களை நம்பி நான் ஏமாந்தேன்; இப்படியும் நீங்கள் நடந்து கொள்வதழகா" என்று கேட்டேன். தன்னுடைய காரியத்துக்கு வருந்த வேண்டியிருக்க, அந்த நண்பர் என்னுடைய குட்டை வெளியிட்டு விடுவதாகப் பயமுறுத்தினார். "என்னிடத்தில் ஒளிமறைவாக எதுவுமில்லை; என்னைப்பற்றியாருக்கு எது வேண்டுமானாலும் சொல்லுங்கள்; ஆனால் இந்த நிமிஷமே நீங்கள் வீட்டைவிட்டு புறப்பட வேண்டும்" என்று தெரிவித்தேன். நண்பருக்கு ஆத்திரம் அதிகரித்தது. நான் உடனே குமஸ்தாவிடம் சொல்லி போலீஸ்சூப்பரிண்டென்டெண்டுக்குத் தகவல்தெரிவிக்கும்படி அனுப்பினேன். என்வீட்டில் ஒருவன் தகாத முறையில் நடந்துகொண்டுவிட்டதாகவும், வீட்டை விட்டுப்போகமறுப்பதாகவும், போலீஸ் சூப்பரிண்டென்டெண்டுக்குத்தெரிவிக்கும்படி குமஸ்தாவிடம் சொன்னேன்.

இவ்வாறு நான் செய்தி சொல்லியனுப்பியபிறகு தான் நண்பருக்கு உண்மைவிளங்கிற்று. நான் இப்படிப்பட்டவன் என்று தெரிந்து கொண்டார். அவர்செய்த குற்றம் அவருக்கே பயத்தை யுண்டுபண்ணிவிட்டது. என்னை மன்னிப்புக்கேட்டார். போலீஸாருக்குத் தெரிவிக்க வேண்டாமென்று கெஞ்சினார். உடனே வீட்டைவிட்டுப் போவதாகச் சொல்லி, வெளியே நடந்துவிட்டார்.

என்னுடைய வாழ்வில் இச்சம்பவம் எனக்கு ஒரு பெரிய எச்சரிக்கையாயிருந்தது. ஒரு நண்பன் இப்படியும் நடப்பதுண்டாவென்று எனக்கு ஆச்சரியமாயிருந்தது. அத்தோழனை இத்தனை நாள் என்கூட வைத்திருந்தது பிசகென்று உணர்ந்தேன். அந்நண்பன் கெட்டவனென்று எனக்கு ஏற்கெனவே தெரியும். ஆனால் அவனை நல்ல வழிக்குக்கொண்டு வரலாமென்று நம்பி, என்னுடன் வைத்துக்கொண்டிருந்தேன். வேறு சில நண்பர்களின் எச்சரிக்கையைக்கூட நான் பொருட்படுத்தவில்லை. புதிய சமையல்காரன் மூலமாக நல்லவேளையாய் நண்பனின் யோக்கியதை வெளியாயிற்று. அந்நண்பனின் யோசனைப்படி அதுகாறும் நான் குருட்டுத்தனமாக நடந்து வந்தேன். ஏற்கெனவே எனது ஆபீஸைவிட்டு வெளியேபோனதாகச்சொன்ன குமஸ்தாவைப்பற்றி எனக்கு சந்தேகம் உதிக்கும்படி செய்தவன்கூட இந் "நண்பன்" தான் என்று எனக்குப்பின்னால் தெரியவந்தது.

புதிய சமையல்காரனுக்கு சரியாக சமைக்கத் தெரியாது. ஆனால்தெய்வாதீனமாக என்னிடத்தில் அவன் வந்து சேர்ந்ததாக நான் நினைத்தேன். அவன் வந்திராவிடில் எனது நண்பரின் யோக்கியதை வெளிப்பட்டிராது. நண்பருடைய அறையில் இருந்த ஸ்திரீ என் வீட்டிலேயே சாசுவதமாகக் கொண்டு வைக்கப்பட்டிருந்ததாகவும், வெகுகாலமாக அந்த விஷயம் நடந்து வந்ததென்றும், ஆனால் யாரும் அதை வெளியிட தைரியங்கொள்ளவில்லையென்றும் எனக்குத் தெரியவந்தது. இந்த சங்கதிகளையெல்லாம் நான் தெரிந்துகொண்ட பின், புதிய சமையல்காரன் என்னிடத்தில் வந்து "இனி உங்கள் வீட்டில் நான் இருக்க மாட்டேன்; நீங்கள் சுலபமாக எதையும் நம்பி ஏமாந்து போகிறீர்கள்; இது எனக்கு ஏற்ற விடமல்ல" என்று சொன்னான். நானும் விடைகொடுத்து அனுப்பிவிட்டேன். நண்பரின் தவறால் எனது ஆபீஸைவிட்டு வெளியே போன குமஸ்தாவுக்கு நான் என்ன சமாதானம் சொல்லியும், என்ன பரிஹாரம் செய்வதாகச் சொல்லியும் அவர் கேட்கவில்லை. அதை நினைக்கும்போதெல்லாம் எனக்கு வருத்தமாயிருக்கும்.

---

# மெய்வாழ்க்கை கண்டறிந்த வேந்தன்.

## புத்தர் ஞானம்.

(முருகதாசன் எழுதுகிறார்.)

கடுந்தவம் புரியுமவர்களைப்பார்த்துப் பின்னுஞ்சொல்வார்:— "தவம் செய்து கோடி வருஷம் நிலைத்திருந்த போதிலும் இப்பேறுகள் கடைசியில் அழிந்து போகின்றன. இல்லையெனில் ஒரு பொழுதும் மாறுதபடி இவ்வாழ்வினின்று அவ்வளவு வேறானதாய் ஒரு வாழ்வு நீழுலகத்திலாவது, மேலுலகத்திலாவது இருக்கிறதோ? உமது தேவர்கள் எக்காலத்தும் நிலைத்திருக்கிறார்களோ சொல்லும்" என்று கேட்க அத்தபசி, "இல்லை. பிரம்மம் மட்டுமே என்றும் நிலைத்திருக்கிறது. தேவர்களெல்லாம் சில காலம் மட்டுமே வாழ்கிறார்க"ளென்றான்.

அதற்கு புத்தர், "நீங்கள் சுத்தர்களாகவும், தைரியமுள்ளவர்களாகவும் தோன்றுகிறீர்கள். அப்படியே ஞானமுள்ளவர்களாகவுமிருந்தால் நிச்சயமல்லாததும், ஞானமடையக் கூடியதுமான லாபங்களுக்காக இவ்வளவு தூரம் உங்களைத் துன்பப்படுத்திக் கொள்வீர்களா? ஆத்துமா விடத்தில் பிரியமுடையவர்களாயிருந்தால் அவ்வாத்துமாவுக்கு வாகனமாயிருக்கிற இவ்வுடலை அது தன் காரியத்தைச் செய்து முடிப்பதற்குள் இப்படித் துன்பப்படுத்த வேண்டுமோ? இவ்வுடல் ஜீவனுக்கு வீடு. நாம் முன் ஜென்மங்களிற் செய்த வினையினால் இதில் வாசம் செய்கிறோம். விடியற்காலமாகி நல்ல வெளிச்சம் வரும் வரையும் நமக்குக் கிடைத்த சிறிய ஒளியோடு அதிற்றங்கி யிருந்து சாளரங்களினின்றும் எப்பொழுது விடியப் போகிறது என்று பார்த்துக் கொண்டிருப்பதைவிட்டு அவ்வீட்டை உள்ளிருந்தே இடிக்க ஆரம்பிப்பது என்ன மதியீனம்!" என்று சொல்ல, அவர்கள் "ராஜ புத்திரா! நாங்கள் இந்த வழியைப பிடித்துக் கொண்டு அதில் பாவிய கற்களெல்லாம் நெருப்பாகவிருந்தாலும் மரணம் நிச்சயமென்று நம்பி அதுவரையும் இவ்வழியிலேயே நடக்க வெண்ணி யிருக்கிறோம். உனக்கு இதனிலும் நல்ல வழிதெரியுமானால் சொல்; இல்லாவிடில் உன் பாட்டைப் பார்த்துக் கொண்டுபோ" வென்றார்கள்.

இப்படி மனித வாழ்விலுள்ள பிரியத்தினால் சுவர்க்கத்தை நம்பி தங்களை வருத்துக்கொள்வதையும், இனி நரகங் கிடைப்பதாயிருந்தால் அது இவ்வாழ்விலும் கெட்டதாயிருக்காதபடி இவ்வாழ்வை நரகத்திலும கேடு கெட்டதாகச் செய்வதையும், உடல் மிகச் சிதைந்திருந்தால் ஜீவன் அதிலிருந்து சீக்கிரம் விடுபடுமென்று உடலைத் துன்பப்படுத்துவதையும் புத்தர் பார்த்து, மிகுந்த விசனத்துடன் சொன்னார். முகத்தைச் சூரியனிடம் காண்பித்துக் கொண்டு அவன் கொடுக்கும் வெளிச்சத்தினால் சந்தோஷமடைந்து அதற்குப் பதில் மனோரம்மியமான வாசனையையும், கண்ணுக் கினிய வர்ணங்களையும் கொடுக்கும் புஷ்பங்களே! நீங்களொருவரும் உங்கள் அழகைக் கெடுத்து வாழ்வை விசனகரமாக்குவதில்லை. மலையினின்றும் தண் கடலினின்றும் வீசும் இளங் காற்றையுண்ண ஆவலாய் ஆகாயத்தைத் துளைத்துக் கொண்டு உமது தலையை உயரக் கிளப்பும் விருட்சங்களே! நீங்கள் விதையினின்று முளைத்து பலன் கொடுப்பதுவரை சந்தோஷமாக வளர்ந்து காற்றில் உல்லாசமாகப் பாடி இரைந்து கொண்டிருப்பது யாது தந்திரத்தினால்? மரங்களில் களிப்புடன் பாடிக் கொண்டிருக்கும் பக்ஷிகளே! நீங்களேன் இப்போது தங்களுக்கு வேண்டியவைகளை வெறுத்து அதனால் பெரிய பேறுகளை அடைய விரும்புவதில்லை. ஆனால் உங்களைக் கொல்லும் மனிதன் உங்கள திபதியானதால் ஞானமுள்ளவனாயிருக்கிறான். ஜீவ ஹிம்சையில் வளர்ந்த ஞானம் இப்படித் தனக்குத் துன்பம் விளைவிப்பதில் காண்பிக்கிறது.

இப்படி புத்தர் சொல்லி முடியுமுன் அம்மலையினின்று ஒரு ஆட்டுக் கூட்டம் இறங்கி வந்தது. அவைகள் பாதையினின்று புல்லையும், தழையையும் கடிப்பதற்காக விலகியோடாதபடி இருவர் பின்னிருந்து அவைகளை ஓட்டிக் கொண்டிருந்தார்கள். அக்கூட்டத்திலுள்ள ஒரு பெண்ணாட்டின் இரண்டு குட்டிகளில் ஒன்று நொண்டியாயிருந்தது. ஆகையால் அதன் கூட்டாளி முன்னால் குதித்துக் கொண்டோடுகையில் இது பின்னால் நொண்டி நொண்டி நடந்தது. அவைகளின் தாய் ஒன்றையும் விட மனமின்றி இரண்டிற்கும் நடுவில் அங்குமிங்குமாக ஓடிக் கொண்டிருந்தது. இதைப் புத்தர் கண்டு அப்பெண்ணாட்டை நோக்கி அம்மா! நீ வருந்த வேண்டாம்; நீ போகிற விடத்திற்கு உன் குழந்தையைக் கொண்டு வருகிறேன் என்று அக்குன்றிலிருந்து உலகத்தின் கஷ்டங்களைப் பார்த்துக் கொண்டிருப்பதை விட ஒரு பிராணியின் துன்பத்தையாவது தீர்ப்பது நல்லது என அந்நொண்டிக் குட்டியை யெடுத்து தம் தோளில் வைத்துக் கொண்டார். பின்னும் அவ்விடையரைப் பார்த்து நண்பர்களே! சாதாரணமாக சாயந்திரமல்லவோ ஜனங்கள் ஆடுகளை வீட்டிற்கு ஓட்டிக் கொண்டு போவது; நீங்கள் ஏன் மத்தியானமே ஓட்டிக் கொண்டு போகிறீர்கள் என்று கேட்க, அவர்கள் எங்களரசன் இன்று செய்கிற யாகத்திற்காக இந்த இருநூறு ஆடுகளையும் கொண்டு போகிறோமென்றார்கள். புத்தர் ஆனால் நானும் வருகிறேனென்று அப்பெண்ணாடு பின்னே வர குட்டியையும் சுமந்து அவர்களுடன் போனார்.

போகும்போது வழியில் பாம்பு கடித்து மகனை இழந்த தாய்க்கு ஞானம் வரும்படி செய்தார். பம்பிசாரன் யாகத்தில் ஆடுகளை வெட்டிக் கொல்லத் தயாராய் நின்றவைகளை கொல்லாமற்தடுத்து வைத்தார். யாக மாம்சம் தின்னும் பிராமணர்கள் எது மோசம் வந்துவிட்டதென்று புத்தரிடம் அநேகர் வாதித்தார்கள். முடிவில் புத்தரே வாதில் வென்றார். யாக சாலையிலுள்ள பிராமணர்களெல்லாம் கொல்லத்தயாராய் வைத்திருந்த ஆடுகளை யெல்லாம் ஓட்டி விட்டு புத்தரை வலம் வந்து நமஸ்கரித்து அவருடன் அனேகர் சிஷ்யரானார்கள். இதன் முழு விபரங்கள் 12-4-26—ல் வெளிவந்த நம் மித்திரனில் புத்தர் ஆடு சுமந்த கதையில் தெளிவாயெழுதப்பட்டிருப்பதால் இங்ஙனம் மிகச் சுருக்கி விட்டோம். அதுமுதல் பிராமணர்களிலநேகர் ஆடுகளைக் கொன்று தின்னுங் கொடுமையை விட்டு விட்டார்களென்றாலும் இன்னும் வடக்கேயுள்ள சில பிராமணர் மச்சம் சாப்பிட்டு வருவது மிகவும் வருந்தத்தக்கதே.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## திக்கு விஷயம்.

(ஏ. ஏ. கே. ஆதித்தன் மொழி பெயர்ப்பு.)

### ஸ்ரீமதி சாகுந்தலா பாரன்ஜ்பி.

தனது பீ. எஸ்ஸி பரீட்சையில் முதல் தரமாகத்தேறிய ஸ்ரீமதி சாகுந்தலம் கணிதசாஸ்திர பயிற்சிக்காக சமீபத்தில் இங்கிலாந்து போவது நற்சமாச்சாரமே. இம்மாது மாகாணக் கலா நன்கொடையாக வருஷத்திற்கு 200 பவுன் வீதம் 3 வருடத்திற்குப் பெறுவர்.

### எகிப்திய மாது.

ஜாக்கியா ஹானிம் அப்கல் ஹமீத் சுலைமான் என்ற கல்வியிற்சிறந்த எகிப்திய மாது இந்தியாவிற்குப் பிரயாணம் செய்கிறார். இவர் எகிப்தில் பாலர் போஷணை முறையை ஸ்தாபித்தவரும், கைரோ நகரில் வித்யா இலாக்காத் தலைமை அதிகாரியுமாவர். இந்திய ஸ்திரீகளை முன்னேற்றப் பிரியங் கொள்ளும் பெண்கள் இவரைச் சந்திப்பாராயின் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைக் கலந்து பலன் பெறலாம்.

### இந்தியர் அந்தஸ்து.

ஸர். டீ. விஜயராகவாச்சாரியார் கானடா அரசியலால் அழைக்கப்பட்டு தேசியக்காட்சி சாலையைப் பிரதிஷ்டை செய்யப்போயிருக்தனர். கானடா, இந்திய வர்த்தாரை நன்கு பரிபாலிக்காததினால் இவ்விந்தியரை ஷை பிரதிஷ்டைக்கு அழைத்தகாரணம் தெரிகிறதில்லை.

சில வருடங்கட்கு முன் கவீந்திரர் ஆகிய ரபேந்திராநாத் டாக்கூர் அழைக்கப்பட்டிருந்த போது. அவர் தன் இந்திய தேசத்தாரை தன்னிடத்தில் வசிக்கத் தகுதியற்றவராகக் கருதும் ஒரு ஊருக்கும் தான் போவதில்லை என மறுத்துவிட்டார். இச்சம்பவம் நமது கவியைப்போன்று ஒவ்வொரு இந்தியனும் பிறதேச உணர்ச்சி உணர்ந்து நடக்கவேண்டும் என்பதற்காக எடுத்தாளப்பட்டது.

வங்காளபாஷையிலே ஒரு பசுவைக் கொன்று அதன் சொந்தக்காரனுக்கு பசுவுக்கு ஈடாக அதன் தோலியால் செய்யப்பட்ட இரண்டு ஜோடி செருப்பு தானம்செய்வதாக ஒரு பழமொழியுண்டு. கானடா இந்தியனை மரியாதை செய்வதும் இதையொத்த ஓர் விபரீத முறையாம்.

### மகளிர் விஜயம்.

நடந்த ஜூன் மாதம் பாரிஸ் நகரத்தில் நடந்த நாஷனல் காங்கிரஸில் ஆறு இந்திய ஸ்திரீகள் பிரமுகமானவர்கள் முறையே, (1) ஸ்ரீமதி பாரி, 2 டாக்டர் முத்துசாமி அம்மாள், 3 ஸ்ரீமதி சுவாமிநாதம், 4 ஸ்ரீமதி ருக்மணிலக்ஷ்மிபதி, 5 ஸ்ரீமதி சென், 6 டாக்டர் மோனட். இந்திய ஆடவரும் மகளிரும் பூமியின் பல இடங்களிலுள்ளோரிடத்தும் கலந்துறவாடல் மிகவும் விரும்பத்தக்க விஷயம். துண்டுபட்டுநிற்பது இந்தியாவிற்கு இரட்சிப்பை அளிக்குமா?

### நாணய உருவம்.

தற்காலத்து நாணயங்கள் பெரும்பாலும் வட்டமாகவும் தட்டையாகவும் இருக்கின்றன. இத்தவடிவம் எத்தனையோ நூற்றுக்கணக்கான ஆண்டுகளின் அனுபவத்தில் திருத்தியமைக்கப்பட்டது. இவ்வடிவம் இடம் பெயர்த்துக்கொண்டு போகவும், குவித்துவைக்கவும், கைப் பழக்கத்திற்கும் எண்ணுவதற்கும் மிகவசதியானதன்றோ? பண்டைய நாணயங்களைப் பார்ப்போமானால் பலவித வடிவங்களும் ரூபங்களும் காணவரலாம். ஆதியில் உண்டான நாணயங்கள் வானா ஒருகட்டி உலோகத்தில் ஓர் முத்திரை வைக்கப்பட்டனவைகளாகவே இருந்தன. பின்னர் முட்டை வடிவமாக மாறின. நாட்கள் ஆக ஆக வட்டவடிவத் தட்டையாய்மாறின. ஆதியில் இந்தியா எப்போதும் சதுரவடிவான நாணயங்களிலே அனுபோகப்பட்டது. சில நூற்றாண்டுகட்குள் தான் இம்மாதிரி சௌகரியந்தாத்தக்க வடிவம் வந்துள்ளது.

### காரண மென்ன?

'அஸாஹி' என்ற தினசரி ஜப்பானியப் பத்திரிகை 2120000 சந்தாதாரைக்கொண்டது. ஜப்பான் சுயாதீன தேசமாயிருப்பதும், ஆடவரும் மகளிரும் புதிய சீர்திருத்தங்களின் பிரகாரம் கல்வி வாசனை யூட்டப்படுவதுமே இதன் காரணமாகும்.

### இதிகாச நிபுணர்.

விற்பனர் ராதகுமட் மூக்கர் ஜீ பரோடா அரசியலாரால் புதிய சரித்திர ஆராய்ச்சி வழித்துறையின் யோக்யதையாய் 1000 ரூபாய் வெகுமதியும் 5 வருடங்கட்கு வருடத்திற்கு 1200 ரூபாய் கொடையும், இதிகாச சிரோமணி என்ற பட்டமும் கொடுக்கப்பட்டிருக்கிறார்.

மேலும் பரோடா அரசியல் இவரை ஐரோப்பாவிற்கனுப்பி தேசியக் கலவியைப்பற்றி அதன் பிரதான தேசங்களில் புகட்ட உத்தேசித்திருக்கிறது. வேலையின்மை என்பதின் அந்தரங்க உண்மை விஷயங்களை அவர் அறிந்து வருவர் என நாம் நினைக்கிறோம். அவரிடமிருந்த மிகுந்த பலனை எதிர்பார்க்கிறோம்.


## சென்னை சட்டசபை.

எலெக்ஷன் 1926ஹு நவம்பர்மீ 8உ

### திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லா கிறிஸ்தவ சமுகத்தினர்களே !

### ஸ்ரீமான் டானியல் தாமஸ் நாடார் அவர்களுக்கே ஓட்டுக்கொடுங்கள்.

சென்னைசட்டசபைக்கு இராமநாதபுரம்-திருநெல்வேலிஜில்லா கிறிஸ்தவ தொகுதிக்கு அபேக்ஷகராய் நிற்கும் நமது குலப்பிரதிநிதி ஸ்ரீமான் டானியல் தாமஸ்நாடார் அவர்கள் திறம்பிய அறிவாளர். B A பட்டதாரி. சொல்வன்மையும் வாக்சாதுர்யமும் நிறைந்த பிரபல வக்கீல். எல்லோர்க்கும் நல்லாரென ஒப்பத்தகுந்தவர். இன்னாரின் சட்டசபைப் பிரவேசம் நாட்டுக்கும் நமக்கும் நல்லபயனளிக்கும். ஆகையால் ஒவ்வொரு கிறிஸ்தவ சகோதர ஓட்டரும் தவறாது இன்னாருக்கே தங்கள் ஓட்டை பதிவுசெய்யுமாறு வேண்டுகிறோம்.


### சங்கீத விற்பனி.

இவ்வருட இந்தியர் மாதர் சர்வகலாசாலையின் நிர்வாக சபைக்கூட்டம் மிகவும் குறிப்பிடத்தக்கது. ஏனெனின் ஆங்கமர்ந்த அங்கத்தினருள் தனது பீ. ஏ. பரீக்ஷைக்கு சங்கீதத்தை ஓர் பாடமாகத் தெரிந்துகொண்டது ஓர் விதவையாகும். இம்மாது தனது பரீக்ஷையிலும் முற்றும் தேறியிருக்கிறார். இந்த மஞ்சீலாபாய் மெட்டா எனும் மாதே இந்திய கல்லூரியில் வந்த முதல் சங்கீத விற்பனி. இஃது குறிப்பிடத்தக்க பேர் விஷயமன்றோ! வருடாந்தரப்பாடங்களில் கல்லூரிகளுக்குச் சிற்ப சாஸ்திரத்தை ஓர் பாடமாக அமைக்கவேண்டுமென்று அக்கிராசனர் சொல்லும்படியாக இது தூண்டியது. இஃது சிற்பசாஸ்திரம் நாட்டில் தழைத்தோங்கு மென்பதற்கு ஓர் அறிகுறியாக இருக்கிறது. ஸ்திரீ ஜனங்களுக்கெனறே ஓர் தனி வித்யா இலாக்காக்கல்லூரிகள் நியமிக்கப்பட வேண்டும் என்ற நோக்கமும் சமீபத்தில் உண்டாகலாம் போல் தோன்றுகிறது. ஸ்ரீமதி மஞ்சீலாபாய் நன்குகப் பாடுவார். பர்க்கேனட் என்னும் தனது பரீக்ஷகரால் மிகவும் கடுமையாகச் சோதிக்கப்பட்டார். சுலோசனிதேசே என்பவர் இவர் தாயாராகும். இவரும் இந்திய மாதர் சங்கத்து அங்கத்தினருள் ஒருவர். ஜனசமூக சீர்திருத்தத்தின் தன் அபூர்வ வேலைப்பணிமித்தமும் சிற்ப சாஸ்திரம் கலை விற்பனத்தினிமித்தமும் இத் தாயாரும் பரோடா அரசியலால் சமீபத்தில் பதக்கம் பரிசு பெற்றிருக்கிறார். பரோடா பெரியார் குறிப்பில் வரத்தக்க மாதருள் நமது மஞ்சிலாபாய் முதல் மாதாவர்.

### கப்பலில் துப்பாக்கிப் பிரயோகம்.

சீனவுக்குச் சமீபமாக அந்நியநாட்டுக் கப்பல்கள் பிரயாணஞ்செய்து கொண்டிருக்கும்போது சீனர்கள் தங்கள் கப்பலிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்கின்றனர். பயன் என்ன வாகுமோ!

### ஜனத்தொகை.

இந்துக்களுள் 10000 பேருக்கு

85 வயதிலிருந்து அதற்குமேல் 1

| | | | | |
|---|---|---|---|---|
| 80 | விருந்து | 85 | வரை | 9 |
| 75 | ,, | 80 | ,, | 25 |
| 70 | ,, | 75 | ,, | 58 |
| 65 | ,, | 70 | ,, | 106 |
| 60 | ,, | 65 | ,, | 160 |
| 55 | ,, | 60 | ,, | 235 |
| 50 | ,, | 55 | ,, | 333 |
| 45 | ,, | 50 | ,; | 470 |
| 40 | ,, | 45 | ,, | 615 |
| 35 | ,, | 40 | ,, | 723 |
| 30 | ,, | 45 | ,, | 815 |
| 25 | ,, | 30 | ,, | 895 |
| 20 | ,, | 25 | ,, | 950 |
| 15 | ,, | 20 | ,, | 996 |
| 10 | ,, | 15 | ,, | 1063 |
| 5 | ,, | 10 | ,, | 1151 |
| 0 | ,, | 5 | ,, | 1395 |

ஆண்களிலிருக்கிறார்கள்.

பெண்களுக்குள்.

85 வயதிலிருந்து அதற்குமேல் 1

| | | | | |
|---|---|---|---|---|
| 80 | விருந்து | 85 | வரை | 10 |
| 75 | ,, | 80 | ,, | 28 |
| 70 | ,, | 75 | ,, | 63 |
| 65 | ,, | 70 | ,, | 114 |
| 60 | ,, | 65 | ,, | 173 |
| 55 | ,, | 60 | ,, | 246 |
| 50 | ,, | 55 | ,, | 341 |
| 45 | ;, | 50 | ,, | 467 |
| 40 | ,, | 45 | ,, | 600 |
| 35 | ,, | 40 | ,, | 698 |
| 30 | ,, | 35 | ,, | 789 |
| 25 | ,, | 30 | ,, | 869 |
| 20 | ,, | 25 | ,, | 931 |
| 15 | ,, | 20 | ,; | 995 |
| 10 | ,, | 15 | ,, | 1077 |
| 5 | ,, | 10 | ,, | 1179 |
| 0 | ,, | 5 | ,, | 1419 |

பேர் வீதமும் இருக்கிறார்கள்.

## மூட நம்பிக்கையா, பிடிவாதமா?

திருநெல்வேலி ஜில்லா, நாங்குநேரித்தாலுகா, கரைச் சுத்து புதூரில் நாடார் ரோமான் காதலிக் கிறிஸ்தவர்களுக்கும் நாடார் சர்ச்சாப் இங்கிலாந்து எஸ் பி. ஜி மிஷன் கிறிஸ்தவர்களுக்கும் தேவாலயத்தின் முன்புக்கு மேளவாத்தியம் செய்யலாகாதென்று இரண்டு வருஷகாலமாய் தாவா ஏற்பட்டு கேஸ் ஆரம்பமாகி ஏராளமான பணச்செலவுகள் ஆகியும், சென்ற செப்டம்பர் மாசம் நாடார் இந்துக்களுக்கும் ஷை நாடார் சர்ச்சாப் இங்கிலாந்து எஸ். பி. ஜி. மிஷன் கிறிஸ்தவர்களுக்கும் அவ்விதமே தாவா ஏற்பட்டு கேஸ் ஆரம்பமாகி இருப்பதாகவும் கேள்வியுற்று விசன மடைகின்றேன்.

இந்த சுவாதந்திரியதாக காலத்திலுமா இத்தீய கொள்கை நம்குலத்தவர்க்குள் நடக்கவேணும்? கிறிஸ்தவர்களென்றால் கிறிஸ்துவின் தன்மை வேண்டாமா? அடாத காரியத்தில் தலையிடலாமா? உங்களுக்குள் உங்களில் விரோதமுண்டானால் அக்கூட்டத்துக்கு ஐயோ கேடா மென்று யேசுரட்சகர் தெளிவாய் சொல்லி இருக்கிறாரே! இந்தவிதமான போதகம் படித்திருந்துமா மோசம் போகிறீர்கள் தேவாலயங்கள் முன்புக்கு மேளவாத்தியம் அடித்துப் போவதால் கிறிஸ்தவர்களுக்கு என்ன இடையூறுகள் ஏற்படுகின்றன? ஒரு விதமான இடையூறுகளுமில்லையே. இடையூறு வரப்போகிறதுமில்லையே. எல்லாம் நான் என்ற சொல்லின் பிடிவாதமேயாகும்; ஆங்காரம் பிடித்த சம்மனசுகள் எங்கு இருக்கிறார்களென்பது கிறிஸ்தவர்கள் அறிந்திருந்துமா மோசம் போகிறீர்கள். மேலும் நமது ரட்சகர் தேவாலயத்தின் முன்புக்கு மேளவாத்தியம் செய்யலாகாதென்று விலக்கி யிருக்கிறாரா? அப்படி விலக்கவுமில்லையே. அவர் விலக்கியிருந்தால் நம் கிறிஸ்தவர்களுக்கும் அப்படித்தானே. ஏன் நமது கோவிலில் பாடலாமா? ஆர்மோனியம் வாசிக்கலாமா? கோவில் பிரதிஷ்டைக்கு தம்பூர் கிண்ணரி வாசிக்கலாமா? பஜனைக்கு மிருதங்கம் சாலரா அடிக்கலாமா? நமது பிஷப் அவர்கள் வரவேற்புக்கு தம்பூர் மேளவாத்தியம் செய்யலாமா? கிறிஸ்தவர்கள் கலியாணத்துக்கு மேளவாத்தியம் செய்யலாமா? அல்லது யேசுவானவர் கிறிஸ்தவர்கள் மட்டும் ஆடலாம் பாடலாம் மேளவாத்தியம் செய்யலாமென்றும், மற்ற மதஸ்தர்கள் செய்தால் கலகம் செய்யுங்களென்றும் சொல்லி இருக்கிறாரா? தன்னைப்போல் பிறரையும் நேசிக்க வேணுமென்றல்லவா போதித்திருக்கிறார். அல்லது மேளவாத்தியம் கோவில் முன்புக்கு செய்தால் இருக்க மாட்டேனென்று சொல்லி ஓடிவிடுகிறாரா? பரலோகத்தில செய்யப்படுவதுபோல் பூலோகத்தில் செய்யப்படுவதாக வென்று சொன்ன ரட்சகர் மேளவாத்தியம் ஆகாது என்று சொல்லவே மாட்டார். பின்னும் இந்த மேளவாத்தியம் நமக்கு எவ்வளவு பிரயோசனமாயிருக்குதோ? இதைவிட எத்தனை மடங்கு நமது ஆண்டவருக்குப் பிரியமா யிருக்கு மென்பது நாம் சொல்லாமலே விளங்கும். தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று பிடிவாதமாயில்லாதேயுங்கள். சாதனைக்காரர் போதனையை கேட்டு நடவாதேயுங்கள். அப்புதூருக்கு போதகர்கள் சாந்த குணமுள்ள வராகயிருந்தால் இவ்வித குழப்பங்களும் பணச்செலவுகளும் வரவிடார்கள். அநேக கிராமங்களில் ஒவ்வொரு கோவிலுக்குமே ஒவ்வொரு சட்டதிட்டம் ஏற்படுத்தியு மிருக்கிறார்கள். இது போதகருடைய கோட்பாடுகள். கடவுளை வணங்குவதில் பலர் பலவிதத்திலும் வணங்குவார்கள். அவர்களை குறை கூறலாகாது. கடவுள் எங்கும் பிரகாசமாய் இலங்கும் அரூபி. ஆகையால் எல்லாக் கிறிஸ்தவர்களும் இந்துக்களும் எந்த தேவலாயத்தின் முன்புக்கும் மேளவாத்தியம் செய்ய ஒருவரும் தடைசெய்யாமலிருக்க அன்னவர்களுக்கு வந்தனமளித்து அன்பாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எஸ். சவரிமுத்து நாடார்

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## நிறுத்தம்.

நவம்பர் மீ 8 உ திங்கள் தேர்தல் நாளை முன்னிட்டு தீபாவளிக்கு வழக்கம்போலுள்ள நமதாபீஸ் விடுமுறை நாளை ஒத்திவைத்திருந்து அதற்காக இம்மாதம் கடைசி வாரத்தை விடுமுறையாக விட்டிருக்கிறோம். அடுத்த பத்திரிகை 22—11—26-ல் வெளிவருமென்பதை சந்தா நண்பர்கட்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பத்திராதிபர்.

## நாடார்குலமித்திரன்

அக்ஷய ஹூ அற்பிசி மீ உ௰௩ உ

# இன்றே சோதனை நாள்.

நவம்பர் மீ 8 உ சோமவாரமாகிய இன்றே நாடெங்கும் சோதனை நாள் என்பதை நாம் சொல்லவும் வேண்டுமா? அண்ட பிண்ட சராசர மனைத்தையும் காக்கும் ஆண்டவர் யாவற்றையும் சோதிக்கிறார். அகில இந்தியா வெங்கும் ஆட்சி புரியும் ஆங்கில அரசாங்கம் பாரத நாட்டைப் பலவகையில் சோதிக்கிறது. பாரத நாட்டின் மக்கள் பலர் ஜாதி மத பேதத்தால் ஒருவரை யொருவர் பலவாறு சோதிக்கிறார்கள். மகாத்மா காந்தி ராட்டினத்தை ஓயாமற் சுற்றிக் கொண்டே காற்று எந்தப் பக்கம் அடிக்கிறது; ராட்டின நாதம் எந்தப் பக்கம் செல்கிறது என்று சோதனை போட்டுக்கொண்டிருக்கிறார். எல்லாச் சோதனைகளும் இன்றே தெரிந்துவிடுமென்றே எதிர் பார்ப்பாருமுளர். எவருடைய சோதனையும் ஆண்டவன் சோதனைக்கு முன்னிற்கமுடியாது. படோடோபர்களும், வஞ்சக நெஞ்சகர்களும், மாசழக்கர்களும், பொய்யர்களும், அக்கிரமக்காரர்களும், தங்கள்தங்கள் சாமர்த்தியத்தாலே சகலமும் என்றெண்ணும் மனோகர்விகளும் வெகு கோலாகலமாய் முன்றோன்றி நின்றாலும், அவைகளெல்லாம் ஆண்டவன் சோதனையில் மின் மினி யொளிபோல் மறைந்துபோகவே கூடும். முடிவில் உத்தம பக்தர்கள் சேவையின் பாலே ஆண்டவன் அனுக்கிரகம் பிரகாசித்து நிற்குமென்பதில் என்ன சந்தேகம்? நம் நாட்டுக்கு நலங்கிடைக்க வேண்டுமானால், ராஜியம் நல்ல நிலைமையிற் குன்றாதிலங்க வேண்டுமானால், பூரண ஸ்வராஜியம் பெறுவதற்கு சாதகம் வேண்டுமானால், இன்று நடக்கும் சோதனை நாள் மகாத்மா காந்தி இயக்கத்திற்குச் சாதகமாகத் திரும்ப வேண்டுமென்று எல்லோரும் ஆண்டவனை வேண்டிக் கொள்வார்களாக.

---

# சென்னை சட்டசபை.

## திருநெல்வேலி ஜில்லாத் தேர்தல்.

### அபேட்சகர்களுக்குள் பலமான போட்டி.

### சூட்சிகள் பலிக்காது.

# ஸ்ரீமான் துரைச்சாமி

### நாடாரவர்களுக்கு எங்கும் ஆதரவு.

### அபிமானமுடன் வேலை செய்யும் ஆட்கள் தேவை.

(நமது விசேஷ நிருபரிடமிருந்து)

திருநெல்வேலி ஜில்லா வெங்கும் தேர்தல் கார்கள் சாலைகள் தோறும் பறந்துகொண்டிருக்கின்றன. பிரசாரகர்கள் வெகு சுறு சுறுப்புடன் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். பிள்ளையவர்கள் ரெட்டியாரையும், நாடாரையும் ஜெயித்துவிடப் பார்க்கிறார். ரெட்டியாரும் அப்படியே நாடாரையும், பிள்ளையையும் ஜெயிக்கப் பார்க்கிறார். ஐயர், நாடார் கூட்டாளியாயிருந்தாலும், ஐயரும் ஒரு சில ஐயர்களும் தவிர பெரும்பாலான ஐயர்களின் ஐயம் முற்றிலும் நீங்கவில்லையென்று தெரிகிறது. ஐயரும், பிள்ளையும், ரெட்டியாரும் தனித்தனி நாடார்களுடைய ஓட்டைப் பெறப் பலவிதமான சூட்சிகள் நடத்தி கொண்டிருக்கின்றன. நாடார்குலாபிமானிகள் ஒருவரேனும் இதுவரையும் ஏமாந்துவிட்டதாகத் தெரியவில்லை. ஓட்டுக் கேட்க வருகிறவர்களிடம் தக்க பதிலும், சமாதானமும் சொல்லித் தான் வருகிறார்கள். அதுபோல் கடைசி வரையும் உறுதியாயிருந்து குலாபிமானத்தை நிலை நாட்டுவார்களென்றே நம்புகின்றோம்.

நாடார் மகாஜன சங்கம் காரியதரிசி ஸ்ரீமான் பாண்டிய நாடார், ஸ்ரீமான் ப. வ. சோமசுந்தர நாடார், ஸ்ரீமான் கனியப்ப நாடார் முதலியவர்கள் திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம் தாலுகாக்களிலுள்ள நாடார் குலாபிமானிகளை யெல்லாம் கண்டு பேசினார்கள். இருதாலுகாவிலுமுள்ள நாடார் தலைவர்கள் நாடாருக்குச் சரியானபடி வேலை நடத்துவதாகவும், அங்குள்ள வேலைகள் யாவையும் அவர்களே கவனித்துக் கொள்வதாகவும் வாக்களித்திருக்கிறார்கள். அப்படியே திருநெல்வேலிவந்து மித்திரன் பத்திராதிபர் சு. ஆ. முத்து நாடாரவர்களுடன் தென்காசித் தாலுகா முழுதும் சுற்றி நாடார் குலாபிமானிகளையும், ஓட்டர்களையும் கண்டு பேசினார்கள். அத்தாலுகாவிலுள்ள சுமார் 2500 ஓட்களை வேறு எவரும் கட்டுப்படுத்திவிட முடியாதென்று அத்தாலுகாத் தலைவர்களெல்லாம் வாக்களித்திருக்கிறார்கள். ஸ்ரீமான் பாண்டிய நாடார், எஸ். ஆர். மூக்க நாடார் இருவரும் மற்றும் தாலுகா முக்கியஸ்தர்களும், சகல வேலைகளையும் கவனித்து வருகிறார்கள்.

அம்பாசமுத்திரம் தாலுகாவில் முக்கூடல் ஸ்ரீமான்களான இ. பி. குமாரவேல்நாடார், அருணகிரிநாடார், த.பி. சொக்கலால் முதலிய முக்கியஸ்தர்களிருந்து, எல்லா வேலைகளையும் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள்.

சங்கரன்கோவில் தாலுகா முழுதும் சாத்தூர் ஸ்ரீமான் க. சொ. அ. அருணாசல நாடாரவர்கள் கவனித்து வருகிறார்கள். கோயில்பட்டித் தாலுகாவை ஸ்ரீமான்கள் அ. ம. சின்னமணிநாடார், ரா. பெ. அய்ய நாடார் இருவரும் ஒப்புக் கொண்டு வேலை செய்து வருகிறார்கள். தூத்துக்குடியை, நகரத்திலுள்ள அபிமானிகள் கவனித்து வருகிறார்கள். நாங்குநேரி தாலுகா நாடார் தலைவர்களுடன் ஒத்தாசையாயிருந்து வேலை நடத்துவதற்கு மித்திரன் மாஜி மானேஜர் திருமேனிநாதனும், மித்திரன் ஆபீஸ் உத்தியோகஸ்தர்களும் போயிருக்கிறார்கள். இன்னும் மதுரை, விருதுநகர் முதலிய விடங்களிலிருந்து பல அபிமானிகள் வருவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரையும் பிரசாரர்களும் குலத்தலைவர்களும் நல்லவேலைசெய்திருக்கிறார்கள். கனம் துரைச்சாமிநாடாருக்கு எங்கும் நல்லாதரவிருந்து வருவதாகவே தெரிகிறது. ஆனால் எதிரிகள் எலெக்ஷன் தினத்தில் போலிங் ஆபீசுகளிலும் பிறவிடங்களிலும் பல சூட்சிகள் செய்யக் கூடும். அவைகளை நன்கு கவனித்துக் கொள்வதற்கு நாடார் குலாபிமானிகள் பலர் அவசியம் வேண்டும். ஆகையால் மதுரை, திருமங்கலம் விருதுநகர் முதலிய பல விடங்களிலிருந்து அபிமானிகள் வந்து ஒன்று சேர்ந்து நன்கு வேலை செய்யும்படி வேண்டுகிறேன். குலாபிமானிகளும், ஓட்டர்களும், இப்போதிருக்கும் மனப்பான்மை மாறாமல் உறுதியுடனிருந்தும், வேலை செய்யும் அபிமானிகள் பலர் வெளியிலிருந்து வந்து உற்சாகத்துடன் வேலை நடத்தும் பட்சத்தில் நாடாருக்குப் பூரண வெற்றி யென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. எந்தப் பிள்ளை வந்தெதிர்த்தாலும் நாடார் கோட்டை பிடி படாது. ஆகவே வெற்றி நாடார்களுடைய வேலைத் திறமையிலிருக்கிறதென்பதை நாடார்கள் சிந்திக்க வேண்டும்.

மகாஜனசங்க காரியதரிசி, மித்திரன் அதிபர், ஊழியப்பிரசுரசபைத்தலைவர் முதலியவர்கள் பாளையங்கோட்டைக்குப்போய் ஸ்ரீமான் டானியல் தாமஸ் நாடாருடைய தேர்தல் பிரசார வேலையைகவனித்தார்கள். ஒருமணிநேரமிருந்து அவருடன்சம்பாஷித்தார்கள். அவருக்கு அவர்களால் ஆகவேண்டிய காரியங்களைச் சொல்லியும் செய்வதாயும் உறுதிதந்தார்கள். இவர்கள் சம்பாஷணையிலிருந்தும் ஸ்ரீமான் தாமஸ் செய்து வந்திருக்கும் திறமையான வேலைகளிலிருந்தும் அவருக்குப் பூரணமான ஆதரவிருப்பதாகவே தெரிகிறது. வெற்றிக்குறிகள் அவர் முகத்தில் நன்கு விளங்குகிறது. ஆண்டவன் அவர் பக்கமிருந்து ஜெயிப்பாரென்றே நம்புகிறோம். நாடார்களிலும்பரதவகுலக்கனவான்களும் கிறிஸ்தவருள் மத வித்தியாசமின்றி ஸ்ரீமான் நாடாருக்குப் பேராதரவு செய்கிறார்கள். தஞ்சைஜில்லா கள்ளர்குல கனவான் ராஜப்பா அவர்கள், அவர் குலத்தவர்களுக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பி நமது நாடாரை ஆதரிக்கச் செய்திருக்கிறார். ஆகையால் ஷை, தாமஸ்நாடார் திட்டமாய் ஜெயிக்க வேண்டும்.

---

# மதிப்புரை.

## செல்வக்களஞ்சியம்.

இது ஒரு மாதாந்தத்தமிழ் பத்திரிகை. மதுரை ஆர். எஸ். பதி கம்பெனியாரால் புத்தக ரூபமாக வெளியிடப்பெறுகிறது. வருட சந்தா ரூ 1-0-0 இதில் முக்கியமாய் ஆக்கை நிலைகொள்ளும் மார்க்கங்களும், சித்தவைத்திய முறைகளும், உடலமைப்பு விடயமும் துலக்கப் பெற்றிருக்கின்றன. வேண்டுவோர் மேற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

## ஆனந்தவிஜயன்.

தமிழிலக்கண வித்வான் ஸ்ரீமான் டி. மாசிலாமணி நாடார் அவர்கள் பாளையங்கோட்டையினின்றும் வெளியிட்டு செய்து வந்த ஆனந்த விஜயன் பத்திரிகையை தற்போது ஸ்ரீமான் ச. தாமஸ் பாலையாபிள்ளை அவர்கள் ஈரோட்டினின்றும் வெளியிட்டு வருகிறார். இதில் விசேஷமாய் பல பொது விஷயங்களும், தேசிய சம்பந்தமான கட்டுரைகளும் மிளிர்கின்றன. நாட்டுக்கும் நாட்டார்க்கும் நலந்தரும் வழியில் நீடிய ஆயுளொடு உழைக்க ஆண்டவனை வேண்டுகின்றோம். வருட சந்தா ரூ 1—8—0

## ஜன மித்திரன்.

இது ஸ்ரீமான் பி. எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்களை ஆசிரியராகக்கொண்டு பிரதி வெள்ளிக்கிழமைதோறும் புதுக்கோட்டையினின்றும் வெளிவரும் ஒரு தமிழ்வாரப்பத்திரிகை. இரண்டாண்டுகள் பூர்த்தியாகி ஐப்பசி மீ 6 உ முதற்கொண்டு மூன்றாமாண்டு ஆரம்பமாகியிருக்கிறது. இதில ராஜீய தேசிய விஷயங்களும் பொது வர்த்தமானங்களும் விசேஷக் குறிப்புகளும் தென்படுகின்றன. வருடசந்தா ரூ 6—0—0

## கூடக்கோயில் கேஸ்.

மதுரை ஜில்லா திருமங்கலம் தாலுக்காவிலுள்ள கூடக்கோயில் முதலிய சில கிராமங்களைச் சேர்ந்த மறவர்கள் பலர் 1924-ம் வருஷம் மே மீ 21ம் தேதி கலகம் விளைவித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு மதுரை செஷன்ஸ் ஜட்ஜினால் ஒவ்வொருவரும் 2-வருஷம் கடுங்காவல் தண்டனை விதிக்கப் பட்டனர்.

அத்தினத்தில் அந்த கிராமங்களிலுள்ள நாடார்கள், அங்குள்ள கோயில் உற்சவம் ஒன்றை நடத்திக்கொண்டிருக்கையில் இம்மறவர்கள் அங்கு சென்று உற்சவப்பந்தலுக்கு தீ வைத்துப் பக்கத்திலிருந்த நாடார்கடையையும் கொள்ளையடித்துக் கறகளை விட்டெறிந்து பலரைக் காயப்படுத்தினார்கள் என்பது வழக்கின் விபரம்.

மதுரை செஷன்ஸ் ஜட்ஜின் தீர்ப்பை ஆட்சேபித்து ஹைகோர்ட்டில் அப்பீல செய்துகொள்ளப்பட்டது.

எதிரிகள் சார்பாக ஆஜரான மிஸ்டர், புரூக் எலியட் அப்பீல வாதிக்கையில் உளளூரில் நாடார்களுக்கும் மறவர்களுக்கும வெகுகாலமாக மனஸ்தாபமிருந்து வந்திருக்கிறபடியால் வழக்கு மிகப்படுத்திக் கூறப்படுகிறதென்றும, சாட்சிகள் ஒருவருக்கொருவர் முரணைச் சொல்லியிருக்கிறார்கள் என்றும், தண்டனை வெகு கடுமையென்றும் எடுத்துக்கூறினர்.

முடிவில் கனம் ஜட்ஜ் கீழ்கோர்ட்டின் தீர்ப்பை ஊர்ஜிதப்படுத்தி, தண்டனையை 2-வருஷத்திலிருந்து 1-வருஷம கடுங்காவலாகக் குறைத்தார். ஆனால் கிராம முன்ஸீப்பிற்கு விதித்த 2-வருஷம் காவலை ஊர்ஜிதப்படுத்தினர்.

பப்ளிக்பிராஸிகியூட்டரும், ஸ்ரீமான் சே. வி. சேஷய்யங்காரும் மனுதாருக்காக ஆஜரானார்கள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## பல துறைக்காரிகை.

### சேர்மாதேவி குருகுலம்.

காலஞ்சென்ற ஸ்ரீமான் வி. வி. எஸ் ஐயர் அவர்களால் அரும்பப்பெற்று அவரது காலத்திலேயே பிராமண அபிராமணப் பிணக்குமுற்றி பெரும் போராட்டத்தினிடையே நடைபெற்று வந்த சேர்மாதேவி குருகுலமானது காளதுவரை அதன் விரிந்தநோக்கத்தை வெளியிட்டில. அவரது காயத்திற்குப் பின்னர் ஸ்ரீமான் மகாதேவய்யரவர்களே ஆச்சாரியராயிருந்து நடத்திவருவதிலும் அப்பிணக்கு நிர்வதாயில்லை. இது குறித்து இவரை ஆச்சாரிய பீடத்தினின்றும் விலக்குசெய்து குருகுலத்தை ஒழுங்கான முறையில் நடத்திவர சத்தியாக்கிரகம் நடைபெறுவதாகவும் உதவிக்கு ஸ்ரீமான்கள் இராமசாமிநாயக்கர், இராமநாதன் ஆகியவர்கள் சென்றிருக்கிறதாகவும் தெரிகிறது.

### ஒரே அடியில் இரண்டு.

சமீபத்தில் நூதனக்கருவியொன்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதாம். அவ்வகைத் துப்பாக்கிகொண்டு எதைக் குறித்து சுடுகிறோமோ அதேசமயம் நேரத்தில் கோரியபொருளின் மேல் குண்டு பாய்வதுடன் அப்பொருள் போட்டோ எடுக்கப்படுகிறதாம். திருடர்கள் குண்டுக்குத் தவறி தப்பியோடினும் உருவத்தை இதுகொண்டு உணரலாமாம்.

### உலகத்தில் பெரியது.

5 வரிசை சாவிகளோடும், 242 குமிழ்களோடும், 168-ஸ்டாப்ஸ்களோடும், 10934 பைப்ஸ்களோடுங்கூடியதொரு ஆர்மோனியம் லிவர்பூலிலிருக்கிறதாம். காந்தசக்தியால் ஏற்று செலுத்தப்படுகிறதாம். 35 குதிரை பலமுள்ள மோட்டார்களால் இது செலுத்தப்படுகிறதாம். விலை 35000 பவுண்.

### அதிகாரத்துறவு.

தற்காலத்திய கோர்ட்டுகளில் அவரவர்களின் பணத்திமிருக்குத் தக்கவாறு சட்டங்களும் செக்ஷன்களும் விரிவதுடன் ஒரு கோர்ட்டில் கிடைத்த நியாயம் மறு கோர்ட்டில் பாதிக்கப்படுகிறது; பாதிக்கப்பட்டதொன்றுக்கு நியாயம் வழங்கப்படுகிறது. இதனால் உலகிலகப்பட்ட சர்வத்திரளுக்கும் சரியாய் நியாயம் வழங்கப்படுமாவென்பது கேள்வி. சமீபத்தில் சப்மாஜிஸ்டிரேட் பதவியைத் துறந்தவொரு ஆத்ம ஞானி பின்வருமாறு கூறுகின்றார்:—எனது மனச்சாட்சிக்கு மாறாக நடக்கும்படி கட்டாயம் ஏற்படுகிறது. அதனால் கவர்ன்மெண்டுக்கும் பொதுஜனங்களுக்கும் குற்றமின்றி நடக்க மார்க்கமில்லை. இதனால் எனது கடமையினின்றும் நழுவிய பாவத்திற்காளாகிறேன். ஆகையால் உலகில் சத்தியத்தையும் தர்மத்தையும் கடமையையும் கருதும் எனக்கு அங்கிடங்கொள்ள மனச்சம்மதமில்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.

### இந்தியர் முன்னேற்றம்.

நாட்டில் டாம்பீகமும் பொய்யும் சூதும் வாதும் மலிபவே, களவு பலவகையில் விரிகிறது. பல பெரிய துணிகரமான செயல்களும் நிகழ்கின்றன. பகலிரவென்ற பேதமில்லாமல் எந்த வேளையிலும் எச்சமயத்திலும் கண்ணில் மண்ணைப்போட காவாடிகள் திரிகிறார்கள். நகரப்பகுதியிலும் கிராமப்பகுதியிலும் இடபேதத்திற்கேற்றாற்போல் நாணயமாகவும் வஞ்சகமாகவும் நடப்பதை நவிலத்தரமன்று. இவைகட்கெல்லாம் தொழிற்கட்டையும் வரும்படியின்மையும் வறுமையுமே காரணமாகப் பெரிதும் சொல்லப்படுகிறது. சமீபத்தில் பிடிபட்ட சஸ்மால் என்பானின் திருட்டு சவிஸ்தாரம் வெளிவந்திருப்பதைப் பார்க்கப்போனால் உலகில்யாரையும் நம்புவதற்கில்லை யென்றே பீதியுறவேண்டியதாகிறது. ராஜப்பிரதிநிதி வீட்டிற்கு போட்டோ கிராபருடன் சென்ற இருவர் சிகரட்டுப் பெட்டிகளை திருடிவிட்டனராம். ஆகா இவர்களின் களவின் துணிகரந்தானென்ன! இந்தியர் பாடு இப்பாடு! நாட்டில் தொழிலில்லை; வேலையில்லை; வறுமை அதிகப்படுகிறதென்று சொன்னால் கவர்ன்மெண்டார் கவனிப்பதும் பெரும் பாடாயிருக்கிறது. இந்தியர் முன்னேற்றம் எம்மட்டு இருக்கிறதென்பதை யுணர்தறபாற்று.

### உதவிதானில்லை உபத்திரவ முங்கூடவா?

இந்திய மகாஜனங்கள் தங்களுக்குத் தொழிலில்லை, தொழிலில்லையென்று எவ்வளவு கதறியும் போதியவளவு கவர்ன்மெண்டாதாவு கிடைக்கப் பெறுதல்கொண்டு அதிகமாய் முதல் போட முடியாது போனாலும் தங்கள் அளவில் செய்யக்கூடிய தொழில்களையேனும் ஆரம்பித்து நடத்தலாமென்று ஒரு சிலர் அற்ப சொற்பமாய் தொழிலை ஆரம்பித்து வருகிறார்கள். அதிக லாபம் பெறவழியில்லையானாலும் தொழில் முறையைக் கைவிடாது நடத்தவேண்டுமென்ற அபேக்ஷை கொண்டு தீப்பெட்டி செய்யும் தொழில் சற்றே இந்நாட்டில் விர்த்தியர் கிறது. ஏது, இந்தியர்களும் தொழிலில் முன்னேறி ருசி கண்டுவிட்டால் நம்மை விடமாட்டார்களே என்ற எண்ணங்கொண்டு பிஞ்சியிலேயே முளைகிள்ள முன் வந்திருக்கின்றனராம் கவர்ன்மெண்டார். அதாவது அதிக லாபத்துடன் அந்நிய தேசங்களினின்று ஏராளமாய் உண்டாக்கப் பெற்றுவரும் தீப்பெட்டிகளின் விலைக்கும் இந்நாட்டில் சிறிதுலாபங்கொண்டு உற்பத்தியாகும் தீப்பெட்டி விலைக்கும் தற்போது நிலவரம் சமமாயிருந்து வருகிறது. ஆனால் ஒரு குரோஸின் பேரில் அந்நியநாட்டு தீப்பெட்டிகளுக்கு விதித்துள்ள சுங்கவரி ரூ 1—8—0 யை நீக்கிவிட கவர்ன்மெண்டார் ஆலோசிக்க ஏற்பாடுசெய்ய சுங்கவரி கமிட்டிக்கு உத்தரவிட்டிருக்கிறார்களாம். பாருங்கள் கவர்ன்மெண்டின் போக்கை! இந்த 1½ ரூபாயை ஒரு குரோசின்பேரில் குறைத்தால் தற்போதுள்ள விலையைவிட அந்நிய நாட்டு தீப்பெட்டிகளை இந்தியாவில் 1½ ரூபாய் குறைத்து விற்கலாமன்றோ! இதனால் உள்நாட்டுத் தொழில் பாழ்படுமல்லவா? இதையார்தான் சகிப்பர்?

பிக்கப்பெற்றது அப்படியல்லவெனத் தெரிகிறது. அவர் நாட்டுக்குவந்தால் அயல்நாட்டாரின் மனது மாறுதலடையக் காரணமாகுமென்றும் ஜெர்மனியிலே பலருக்கு கவலையுண்டாகலாமென்றும் பொதுவாக கருதப்படுகிறது. இன்னும் ஒருவேளை வந்துவிட்டாலும் வெர்ஸேல்ஸ் உடன்படிக்கையின்படி மாஜி கெய்சரைவிசாரணை செய்வதற்குதங்களிடம் ஒப்புவித்துவிட வேண்டுமென மிஞ்சு அந்நியநாட்டு மந்திரி அறிவித்திருக்கிறதைக்கொண்டு ஜெர்மன் கவர்ன்மெண்டார் அநுமதிக்கமாட்டாத நிலைமையில் மாஜி கெய்சரும் வர விரும்பவில்லையாம்.

### மீன் மழை.

அமெரிக்காவிலுள்ள ஹண்டூராஸ் எனும் மாகாணத்தில் காடுகளாகவும் மலைகளாகவும் சதுப்பு நிலங்களாகவும் உள்ள ஆயிரக்கணக்கான மைல் விஸ்தீரணமுள்ளவிடங்கள் இன்னும் வெள்ளைக்காரர் புகாவிடங்களாயிருக்கின்றன. ஆங்குசிவப்பு இந்தியர் வசிக்கின்றனர். மூலையில் சிவப்புவர்ணமான ஓர் ஆறு பூமியிலிருந்து பிடுங்கிக்கொண்டு ஓடுகிறது. சிவப்புக்குக் காரணம் பூலோகத்தில் பாபம் செய்கிறவர்கள் நாகமாகிய பூமிக்கடியில் வௌவால்களாகப் பிறந்து ஆங்கு அவைகள் ஒன்றைக் கொன்று சண்டையிட்டு அதனால் சேரும் இரத்தப்பெருக்குத்தான் என்று ஆங்குள்ள இந்தியர் நம்புகிறார்கள். மற்று மோரிடத்தில் ஒவ்வொரு ஜூன் மாதத்திலும் 3 முதல் 7 அங்குலநீளமுள்ள மீன்கள் ஆகாயத்திலிருந்து மழைகாலத்தில் விழுகின்றன.

## சென்னை சட்டசபை.

### ஓர் விண்ணப்பம்.

கனவான்களே!

இப்பொழுது நடக்கப்போகும் சென்னை சட்டசபை எலெக்ஷன்களுக்கு வருகிற நவம்பர் மாதம் 8-ந் தேதி ஓட் எடுக்கப் போகிறபடியால் தாங்கள் ஒவ்வொருவரும் தமக்கேற்பட்ட ஓட்டு பாத்தியத்தை இழக்காது தகுதியுள்ள நபருக்கு ஓட் உரிமையைக் கொடுத்து ஆதரிக்க வேண்டியது தங்கள் கடமையாகும். அப்படி ஓட்கொடுக்கும் சமயத்தில் யாரொருவர் நமது குறைகளை செவ்வனே தெரிந்து உள்ளன்போடு உழைக்கக் கூடியவர்களோ அவர்களுக்கும், ஓட்டர்கள் சுலபமாக பார்த்து பேசக்கூடியவர்களுக்கும், ஒவ்வொரு பிரிவிலும் ஆங்காங்கு வசிப்பவர்களுக்கும் ஓட்டுக் கொடுக்காமல் பிற ஜில்லாவில் வசிப்பவர்களுக்கும் நமது குறைகளை அறிந்துகொள்ள ஹேது இல்லாதவர்களுக்கும் ஓட்டர்களை அடிக்கடி சந்திக்கக்கூடாத நிலைமையிலுள்ளவர்களுக்கும் ஓட்டுக்கொடுத்து ஆதரிப்பது என்ன நியாயம் என்பதை நாம் சற்று ஆராய வேண்டும். ஆனால் நமதிடையே நம்முடைய பிரதிநிதியாக இருப்பதற்கு தகுதியுள்ளவர்கள் இல்லாவிடில் வேறு ஜில்லாவிலுள்ளவர்களையோ வேறு வகுப்பினரையோ யோஜிக்க வேண்டியது அவசியந்தான். அப்படி இல்லாதவரையில் அதைப்பற்றி யோஜிக்கக்காரணமில்லை. ஆனால்எலக்ஷன் விஷயத்தில் மதத்துவேஷங்களையோ ஜாதிவித்தியாசங்களையோ அல்லது மத உட்பிரிவுகளையோ உண்டுபண்ணி நமக்குள் வேற்றுமை ஏற்படுத்தி தகுதியற்ற நபர்களை தேர்ந்தெடுக்கும் சூட்சிகளை செய்துவரும் கசடர்கள் பலர் வெளிப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வார்த்தையில் கல்வியறிவுடைய நீங்கள் ஏமாந்துவிடமாட்டீர்களென்பதாக நினைக்கிறேன்.

திருநெல்வேலி ஜில்லா கிராம

ஓட்டர்களே!

ஸ்ரீமான் துரைச்சாமிநாடாரவர்களுக்கே தங்கள் ஓட்டுகளைப்பதிவுசெய்யுங்கள்.

நாடார் பெருமக்களே!

சென்னை சட்டசபைக்கு திருநெல்வேலி ஜில்லா கிராமத் தொகுதியில் அபேக்ஷகராய் நிற்கும் ஸ்ரீமான் அரி. அ. சு. துரைச்சாமி நாடார் அவர்கள் குல நலம், பிறர் நலம், தேச நலம் கருதும் சிலாக்கியர்; நியாய துரந்தரர்; நியாயவழி தவறி எதிர்ப்போரை மடக்கும் ஆற்றல் பெற்றவர்; யாரிடத்தும் சுமுகமாய் பழகுந் தன்மையினர்; பேச்சு வன்மையிலும், சட்ட ஞானத்திலும் தீரர். ஆகையால் தாங்களனைவரும் தங்கள் ஓட்டுகளை இவருக்குக் கொடுப்பதன்றியும், இதர நண்பர்களையும் கொடுக்கும்படி வேண்டுவன செய்யுமாறு வேண்டுகிறோம்.

### பெண்மக்கள் மேல் பரிவு.

சென்ற வாரத்தில் சென்னையில் கூடிய வேளாளர்மகாநாடு, வேளாளசமூகத்தில் ஆண்மக்களுக்குற்றதுபோல்பெண்மக்களுக்கும் குடும்பச்சொத்தில் பங்கு கொடுக்கவேண்டுமென்று தீர்மானிக்கிறதாம். மாதர் மதிப்புக்கு இதுவும் ஒரு ஏற்றந்தான்.

### புயலும் பூகம்பமும்.

சென்றவாரத்தில் அமெரிக்காவிலுள்ள ஆர்மீனியாவில் பூகம்பம் ஏற்பட்டு கட்டடங்கள் நாசமாயின. 300 பேர்கள் மாண்டனர். 6 கிராமங்கள் இருந்தவிடம் தெரியவில்லை. 12 கிராமங்கள் இஃதால் பாழடைந்தன.

பெர் முடாவில் பெலத்த புயலேற்பட்டு பல கப்பல்கள் சேதமாயின. மூழ்கியும் போயின. ஏராளமான உயிர்ச்சேதமும் 500 லக்ஷம் டாலர் சேதமுமுற்றிருக்கிறது. பணம் பெருத்த நாட்டில் பணச்செலவும் உயிர் சேதமும் நிகழவேண்டுமென்பது யாரிட்ட கட்டளையோ!

### திரும்பிவாரார்!

மாஜி ஜெர்மன் கெய்ஸர் தன்னாட்டுக்குத் திரும்புவாரெனப் பிரஸ்தா

### ராஜ தந்திரங்களா?

ஆதித்திராவிட ரெனப்படுவோர்கள், சாராயக்கடைகளில் ஒருபுறமாக ஒதுக்கப்பட்டு சிறிய சாளரத்தின் வழியாக வாங்கிப்பருக வேண்டியிருக்கிறதே! தாராளமாக இவர்கள் நுழைந்து பருக இடமிருக்கக்கூடாதா? இங்குமா ஜாதி வேற்றுமை காட்டப்படவேண்டுமென்று ஜாதிக் கொடுமையை நினைந்து ஸ்ரீமான் வீரய்யன்கேட்ட கேள்விக்கு, இங்ஙனம் மாகக் கேவலப்படுத்தப்படுகிறோமே யென்றாவது வெட்கப்பட்டு உங்கள் ஜனங்கள் குடிக்க மறப்பார்களல்லவா? என்றதலால் இலாகா மந்திரி கனம் பாத்ரோ அவர்கள் பதில் சொன்னாராம். ஆகா! போகட்டும். இம்மட்டாவது ஜாதிவேற்றுமையை நுழைத்து குடியை நிறுத்தப்பாடுபடுகிறதாகத் தைரியமாய் சொல்லுகிறாரே.

நாங்கள் இவர்களை விட்டவர்களல்லவென பதிலிறுக்கும் பான்மையில் காங்கிரஸ்சுயராஜ்யக்கட்சியார் தீண்டப்படாதார்பால் நடந்துகொள்ளுகிறார்கள். நாட்டில் தீண்டாமை யொழிய வேண்டும்; ஆதித்திராவிட மக்களை சமத்வமாகப்பாவிக்கவேண்டும்; பொது ஸ்தாபனங்களை தாராளமாயனுபவிக்க விட வேண்டுமென்று சொன்னால், இருநூறு ரூபாயில் அங்கு கிணறொன்று வெட்டிக்கொடுக்கவும் 1000 ரூபாயில் இங்கு பள்ளிக்கூடமொன்று ஏற்படுத்தவும் தீர்மானித்திருக்கிறதாகச் சொல்லிவிடுகிறார்கள். இதில் என்ன சமத்வமிருக்கிறதோ அறியோம். பகட்டும், வெளிவேஷமும், சுயநலமும் இன்னும் எவ்வளவு காலத்துக்குத் தான் செல்லுபடியாகுமென்று பார்ப்போம்.

திருநெல்வேலி ராமநாதபுரம்கிறிஸ்தவர் தொகுதிக்கு பிரதிநிதியாகவர பாளயங்கோட்டை வக்கீல் ஸ்ரீமான் டானியல் தாமஸ் முன் வந்திருக்கிறார்கள். அவர்கள் அங்குள்ள பிரபல வக்கீல்களுள் ஒருவரென்பதும் பொது நல ஊழியத்தில் ஈடுபட்டவர்களென்பதும் ஷை ஜில்லாவின் விஷயங்களை தாமே நேரில் அறிந்தவர்களென்பதும் நீங்கள் எல்லோரும் அடிக்கடி பார்த்து பேசக்கூடிய நிலைமையில், அந்த ஜில்லா வாசியாகவும் இருக்கிறவர்களென்பதையும் நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். நாமெல்லோரும் எந்த வகுப்பினர்களைச் சேர்ந்திருந்தாலும் வேற்றுமையின்றி உள்மதப் பிரிவினை நோக்காது அன்னாருக்கு ஓட்டுக் கொடுத்து வெற்றிபெறச் செய்யவேணுமாக்க் கேட்டுக் கொள்ளுகிறேன். பிறஜில்லாவில் இருக்கப்பட்ட என்னைப்போன்ற ஒருவன் இந்த விண்ணப்பம் வெளியிட என்ன காரணம் என்று யோசிக்கலாம். ஆனால் இந்த ஜில்லாவிலும் அவருடைய குணங்களை நாங்கள் நன்கறிந்திருப்பதனாலும் ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள எனது கன்னர் மரபினர் இவர்களுக்கு ஒத்தாசை செய்யவேண்டுமென்பதும் வேற்றுமை பாராட்ட கூடாதென்பதுமே எனது நோக்கமாகும்.

P. S. ராஜப்பா, M-L. C.
பாப்பாநாடு இளைய ஜமீன்தார்,
தஞ்சை முனிசிபல்சேர்மன்.

### ஓர் மரணம்.

ஸர்சங்கரன் நாயர் சகோதரரும் மாஜி டிப்டி கலெக்டருமான திவான் பகதூர் வி. கோபாலநாயர் காலஞ்சென்றதாக அறிவிக்கப்படுகிறது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## மில் அரிசியின் கேடு.

நாகரீகம் முதிர முதிர சாப்பாட்டு விஷயத்தில் நாம் மோசமாய் போய்க்கொண்டிருக்கிறோம். மினுக்கிய அரிசியைச் சாப்பிடுவதுதான் உயர்ந்த நாகரீகம் என்ற எண்ணம் நம்முள் பரவிவிட்டது. இதனால் அரிசி மில்களும் ஏராளமாய் பெருகிவிட்டன. அரிசியிலுள்ள முக்கிய சத்து தவிட்டிலேயே இருக்கிறது. அந்த தவிட்டோடுகூடிய அரிசியைச் சாப்பிடுவது அநாகரீகமென்று நினைக்கிறபடியால் அதைப்போக்குவதற்காக அரிசியை தூய வெண்மையாகும்படி மினுக்குகிறார்கள். கையால் அரிசியை மினுக்கினால் கொஞ்சமாவது தவிடு ஒட்டிக்கொண்டிருக்கும். ஆகையால் அரிசி மில்லில் கொடுத்து நன்றாய் தவிட்டை போக்கிவிடுகிறார்கள். உணவுப்பொருள்களில் முக்கியமான சத்தாகிய "விட்டாமின்" என்பது தவிட்டிலேயே இருப்பதால் அதை மில் போக்கிவிடுகிறது. கடைசியாக வெறும் சக்கையாகிய அரிசியேகிடைக்கிறது. அதை சமைத்துச சாப்பிடும்போது முதலில் அரிசியை தண்ணீரில் கழுவி கொஞ்சமிருக்கிற சத்தையும் போக்கிவிடுகிறார்கள். பின்னால் அரிசிக்குத் தக்கபடி தண்ணீர்விட்டு பொங்குவதில்லை. அதிகமாய தண்ணீர்விட்டு வடிக்கிறபடியால் எல்லா சத்தும் போய்விடுகிறது. இந்த சாதத்தை சாப்பிடுவதால் "பெரி பெரி" என்ற வியாதி நமது நாட்டில் இப்பொழுது அதிகமாய் பரவிவருகிறது. முக்கியமாக அரிசிமில்களில் தீட்டப்படுகிற அரிசியே தன்னுடைய சத்தை இழந்துவிடுகிறபடியால், அந்த அரிசியை உபயோகிக்கிறவர்களுக்கே இந்த வியாதி அதிகமாய் வருகிறது. இந்த வியாதி வந்தால் கால், கை வீங்கி வலி எடுக்க ஆரம்பிக்கிறது. உடம்பில் பலக்குறைவு ஏற்படுகிறது. இதனால் பலர் இறநதும் போகிறார்கள். ஆகையால் மற்ற நாடுகளிலுள்ள சர்க்கார் இந்த வியாதியைப் போக்குவதற்கு தீவிர முயற்சி எடுத்து வருகிறார்கள். நமது நாட்டிலும் இது அதிகமாய் பரவி வருகிறபடியால் இதை வரவொட்டாமல் தடுக்க உடனே நாம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

### தடுக்கும் வழி.

இந்த வியாதியை வரவொட்டாமல் தடுக்க வேண்டுமானால் முதலில் மினுக்கிய அரிசியைச் சாப்பிடுவதை நிறுத்த வேண்டும். மில் அரிசியை உபயோகிக்கக்கூடாது. டின்களில் அடைத்துவரும் பார்லிமாவு, பார்லி அரிசி, ஓட், சவ்வரிசி முதலியவைகளும் மினுக்கியே அனுப்பப்படுகிறபடியால் அவைகளையும் உபயோகிக்கக்கூடாது. எல்லா தானியங்களையும்விட அரிசியிலேயே "விட்டாமின்" என்ற சத்து அதிகமாய் இருக்கிறதோடு சீக்கிரம் ஜீரணமாகக் கூடியதாகவும் இருக்கிறது. தவிட்டைப் போக்காமல் அரிசியை உபயோகிக்க வேண்டும். ராணுவத்தில சிப்பாய்களுக்கு மினுக்காத அரிசியையே கொடுக்கவேண்டுமென்று கண்டிப்பான விதி இருப்பதை ஜனங்கள் கவனிக்க வேண்டும். தவிட்டிலேயே உயர்ந்த சத்து இருக்கிறபடியால் அதைப் போக்காமல் அரிசியை உபயோகிக்க வேண்டும். அரிசிக்குப் போதுமான தண்ணீர்விட்டு பொங்கி உண்ணவேண்டுமே யொழிய, அதிகத் தண்ணீர் விட்டு வடிக்கக்கூடாது. "பெரி பெரி" வியாதி வந்தவர்களுக்கு தவிட்டை தண்ணீரில் போட்டு கொதிக்கவைத்து இறக்கிய ரசத்தைக் கொடுத்தால் உடனே வியாதி குணப்பட ஆரம்பிக்கிறது. இதைத்தெரிந்துதான் பிலிப்பைன் சர்க்கார் தவிட்டு ரசத்தை "பெரி பெரி" வியாதிக் காரர்களுக்கு இனமாய் வழங்கிவருகிறார்கள். தவிட்டு ரசம் "பெரி பெரி" வியாதியை குணப்படுத்துகிற தென்றால், நம்முடைய தினசரி உணவுடன் அதைக் கலந்து நாம் உட்கொண்டால் இந்த வியாதி எப்படி வரமுடியும்? இதை ஜனங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அரிசியிலுள்ள முக்கிய சத்தாகிய தவிட்டை எடுத்து கோழிக்கும, மாட்டுக்கும் போட்டுவிட்டு, போதாக்குறைக்கு அரிசியைக்கழுவிய நீரையும், வடித்த கஞ்சியையும் எடுத்து மாட்டுக்கு வைததுவிடுகிறோம். இந்த புத்திகெட்ட செய்கையைத்தான் நாம் "நாகரீகம்" என்று வெட்கமில்லாமல் சொல்லிக்கொள்ளுகிறோம். நமது தேசத்தில் பரவிவரும் "பெரி பெரி" வியாதியை உடனே ஒழிக்கவேண்டுமானால் மில்லில் அரிசி குத்துவதையும் மில் அரிசியை உபயோகிப்பதையும் உடனே விட்டுவிடவேண்டும்.

"தமிழ் நாடு"

## தூத்துக்குடி.

(நமது நிருபரிடமிருந்து.)

முத்துச்சிலாபம்:–இவ்வூரின்கண்ணே சென்ற மாசிமீ முத்துக்குளிப்பு ஆரம்பித்து நடைபெற்று நிறுத்தப்பட்ட விபரம் யாவருமறிந்த விஷயம் இப்போது மறுபடியும் நாளது ௵ நவம்பர்மீ 6உ முத்துச்சிலாபம் நடத்த ஏற்பாடாகி கவர்ன்மெண்டாரால் விளம்பரப்படுத்தப் பட்டிருக்கிறது. சுமார் இரண்டுவாரம் நடக்குமெனப் பிரஸ்தாபப்படுகிறது.

சட்டசபை எலெக்ஷன்:—சென்னை சட்டசபைக்கு திருநெல்வேலிஜில்லா கிராமத்தொகுதிக்கு அபேக்ஷகராக நிற்கும் ஸ்ரீமான் ஏ. ஆர். ஏ. எஸ். துரைசாமிநாடார் அவர்களுக்காக தூத்துக்குடியிலும் மற்றும் திருநெல்வேலி ஜில்லாவின் பலபாகங்களிலும் பல தலைவர்களும் முக்கியஸ்தர்களும் பிரசப்பிரயத்தனத்துடன் ஓட்டர்களை கண்டுபேசி பிரசாரம்செய்து வருகின்றனர். நாடார்மகாஜனசங்கம் காரியதரிசி ஸ்ரீமான் ப. ம. பாண்டியநாடார் அவர்களும், மதுரை நாடார் ஊழியப் பிரசாரசபை பிரஸிடெண்ட் ஸ்ரீமான் ப. வ. சோமசுந்தரநாடார் அவர்களும் "நாடார்குலமித்திரன்." பத்திராதிபர் ஸ்ரீமான் சூ. ஆ. முத்துநாடார் அவர்களும் இவ்விஷயத்தில் விசேஷ ஊக்கத்துடன் வேலைசெய்து கொண்டிருக்கிறார்கள்.

வர்த்தகம்:—இவ்வூருக்கு பம்பாயிலிருந்து 'சிக்ரன்' ஸ்டீமரும் கராச்சியிலிருந்து 'டொரில்லா' ஸ்டீமரும் வந்து சாக்குகள் இறக்குமதியாகிக் கொண்டிருக்கின்றன. இந்த தீபாவளி நேரத்தில் நவதானியம், பலசரக்கு பஜார்கள் மந்தமாக இருந்து கொண்டிருக்கின்றன.

ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி:—ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யரவர்கள் இன்றுஇரவு8½மணிக்குஇவ்விடம்வந்து சேர்ந்தார். 9-மணிக்கு வட்டக்கிணற்று மைதானத்தில் ஸ்ரீமான் அரி. அ. சு. துரைசாமிநாடார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஓர் மகாநாடு கூடியது. சுமார் 1000 ஜனங்கள் வரை விஜயம் செய்திருந்தனர். அச்சமயம் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள், காங்கிரஸ் காரருக்கே ஓட்கொடுக்கும் அவசியத்தைப்பற்றி சுமார் அரை மணிநேரம்வரை அநேக உதாரணங்களுடன் பிரசங்கம்செய்தார். பின்னால் அக்கிராசனர் கனம் துரைச்சாமிநாடாரவர்களும் காங்கிரஸ் கக்ஷியினர் சட்டசபையில் போய் செய்யப்போகும்வேலைகளைப்பற்றியும் காங்கிரஸ் கக்ஷியினருக்கே ஓட்டுரிமைகளை கொடுப்பதால் நம்மாகாணம் அடையும் நன்மைகளைப்பற்றியும் நீண்டதோர் உபந்நியாசம்செய்தார். கடைசியாக அக்கிராசனருக்கும், ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யரவர்களுக்கும் வந்தனோபசாரம் கூறி பூமாலைசூட்டியவுடன் கூட்டம் கலைந்தது.

## புல்லாநாயக்கன்பட்டி.

இவ்வூரில் ஒரிஜனல் பாண்டிய நாடார் எலிமெண்டரி பாடசாலையென்ற பெயருடன் கூடியதொரு வித்தியாசாலை 1925-௵ ஜனவரி மீ முதல் நடந்து வருகிறதென்பதை கனவான்களனைவருமறிவர். இதில் 95 பையன்கள்வரை வாசிக்கிறார்கள். ஷை ஸ்கூலுக்கு ரூ 1500 யில் ஒரு புதுக் கட்டடம் வாங்கப்பெற்று நாளது அக்ஷய ௵ அற்பசி மீ 5 உ இலுப்பையூர் மகா-ா-ா-ஸ்ரீ த. ப. ஆறுமுக நாடார் அவர்கள் தலைமையின் கீழ் வெகு ஆடம்பரத்துடன் கிரகப்பிரவேசமாயது. குலாபிமானிகள் பலர் விஜயஞ் செய்து வைபவத்தைச் சிறப்பித்தனர். மறு நாள் அம்பலம் மகா-ா-ா-ஸ்ரீ பொ. சண்முக நாடார் தலைமையில் ஒரு கூட்டம் கூடி ஸ்கூலுக்கு பண்டு சேர்க்க ஆலோசிக்கப்பெற்றதென்று ஸ்ரீமான் இ. இருளாண்டி நாடார் எழுதுகிறார்.

## நோட்டீஸ்.

இராமநாதபுரம்ஜில்லா பள்ளிமடம்தாலுகா அருப்புக்கோட்டையில் நெல்,எண்ணெய்முதலிய வியாபாரம் செய்து வந்த ம. பச்சைநாடார் குமாரர்கள் ம. ப. சங்கரலிங்கநாடார் 1. ஷை தம்பி பழனிச்சாமிநாடார் 2 பேர்களும் நாளது அக்ஷய வருஷம் சித்திரைமாசத்தில் ஏதோ கெட்ட எண்ணங்கொண்டு வியாபாரத்தையும் நிலுவை செல்லும்புள்ளிகளையும் கவனியாமல் திடீரென்று எங்கேயோ போய் தலைமறைவாய் இருந்து கொண்டார்கள். இது விவரம் நாங்கள் வகையறு கிரடிட்டர்களுக்கு தெரிந்து, நாங்களும்ஷை ம. ப. ச. & ப கடைக்காரியம் பார்த்துவந்த ம. ச. மீனாக்ஷிசுந்தரநாடாரும், ஷை அருப்புக்கோட்டையில் மு. மு. முத்துக்குமாரஸாமிநாடாரவர்கள் 1, ப. உ. ஆ. சிதம்பரநாடாரவர்கள் 2, ப க உ. அய்யாச்சாமி நாடாரவர்கள் 3, பெ. பழனிச்சாமி நாடாரவர்கள் 4, ச. க சு. துரைச்சாமிநாடாரவர்கள் 5, இந்த ஐந்து பேர்களையும் டிரஸ்டிகளாக நியமித்து 14—6—26-ல் 12 அணா ஸ்டாம்பில் ஓர் முச்சலிக்கா எழுதிக்கொடுத்தும் சாமான் சரக்குகளை ஒப்புவித்தும் ஷையார்களும் கிரடிட்டர்களும் சேர்ந்து சரக்கு சாமான்களை விற்பனை செய்து ஷை ம. ப. ச. & ப. கணக்கில் கண்ட எல்லா கிரடிட்டர்களுக்கும் ஷை தொகைகளை ஈவித்துக்கொடுக்கப் பட்டிருக்கிறது. ஷை முச்சலிக்காவின் சரத்துப்படி 14—6—26-க்குள் ஷையார்கள் வராமல் இன்னமும் மறைந்து கொண்டிருப்பதால் கிரடிட்டர்கள் பாக்கிகளை வசூலிக்கும் விஷயமாய் கோர்ட்டு மூலம் விவகாரத்துக்குப்போனால் கஷ்ட நஷ்டம் வருமென்பதையும் தொகைகுறைந்து போகுமென்பதையும் உத்தேசித்து 10—11—26 வரை நிறுத்திவைத்திருக்கிறோம். ஷைதேதிக்குள் ஷை ம. ப. சங்கரலிங்கநாடார், & பழனிச்சாமி நாடார் இவர்கள் வந்து ஒழுங்கு பண்ணி கிரடிட்டர்களாகிய எங்கள் வகையறுவுக்கு பாக்கித் தொகையை கொடுக்காத பக்ஷத்தில் ஷையார்களை எதிர்பாராமலே கோர்ட்டுமூலம் இன்ஸால்வென்ஸியாக்கி ஷையார்களுடைய ஸ்தாவரசங்கம சொத்துக்களையும் இன்னும் மறைவுதல் செய்திருக்கும் பொருள்களையும்இன்ஸால்வென்ஸி கோர்ட்டுக்குக் கொண்டுவந்து வசூலிக்க உத்தேசித்திருக்கிறோமென்பதை இதன் மூலம் தெரிவித்திருக்கிறோம்.

தெ. சி. கா. பெரியசாமிநாடார்
பிரதர்ஸ்,
தெ. சி. கா. மாரியப்பநாடார்,
கூ. சி. ரா. அ. ரெங்கசாமிநாடார்,
ப. அ. அய்யம்பெருமாள் நாடார்
தம்பி—காமாக்ஷி நாடார்,
விருதுநகர்,
மு. பெ. முத்துமாலைநாடார்,
பெ. பழனிச்சாமிநாடார்,
வ. சுந்தரச்சாமிநாடார்,
அருப்புக்கோட்டை.


## வறுமை தொலைந்தது!

வெள்ளியும் அதன் துணைக்கிரகங்களும் ஓங்கின. அது

## சுக்கிரயோகம்.

ஆகையால்,
வீனஸ் ப்ரீ லைப் அஷ்யூரன்ஸ் ஸ்கீமில் ஒவ்வொருவரும்
அங்கத்தினராகச் சேருங்கள்.
அங்கத்தினராகச் சேரும் சமயமே,
சுக்கிரயோகத்தொடக்கம்.

விபரம் வேண்டுவோர் கீழ்கண்ட விலாசத்திற்கெழுதவும்:—
பி எஸ். எஸ். ராஜன். I. C. A.
செக்ரட்டெரி, வீனஸ் அஷ்யூரென்ஸ் பாங்க், லிமிட்டெட்,
பிராமின் காலனி. தூத்துக்குடி,

குறிப்பு:—செல்வாக்கும், ஊக்கமுமுள்ள ஏஜெண்டுகள் தேவை. நல்ல சம்பளமாவது கமிஷனாவது கொடுக்கப்படும்


## திருட்டு.

நாளது அக்ஷய ௵ அற்பிசிமீ 2 உ வெளியான நாடார் குல மித்திரன் மூன்றாவது பக்கம் நான்காவது கலத்தில் 'திருட்டு' என்ற தலைப்புடன் பட்டுக்கோட்டையிலிருந்து தி. ச. ச. திருக்கைவேல்நாடார். சி. ப. சிந்தாமணி நாடார் ஆகிய இரு பேர்கள் எழுதிய வியாசத்தில்ஏழாயிரம்பண்ணை சா. க.வ. சங்கரலிங்கநாடாராகிய என்பேரில் திருட்டு குற்றம் சாட்டியிருப்பது முற்றிலும் அக்கிரமமாயும் நியாயமற்றதாயும் இருக்கிறது. ஷை திருக்கைவேல் நாடாரும் சிந்தாமணிநாடாரும் முறையே ஏழாயிரம்பண்ணை, சாத்தூர் வாசிகள்தான். நாங்கள் மூவரும் பட்டுக்கோட்டை தஞ்சாவூரில் பேரீச்சம்பழம் சில்லரையில் வாங்கி விற்பது வழக்கம். இப்போது அவர்கள் எழுதியபடி அவர்களிருக்கும் வாடகை வீட்டில் சாமான்களை எடுக்கவாவது தஞ்சாவூர் மா. ம. மாய நாடார்கடையில் அவர்கள் எழுதியபடி நான் செய்ய வரவில்லை. அப்படிசெய்திருப்பதாக வீண் பிரசாரம் பத்திரிகை மூலம் செய்வது ஒரு மனிதனை அவதூறு செய்வதாகும். இது விஷயத்தை ஷை இருவர்களும் நன்குணர்ந்து ஷையார்கள் எழுதிய வியாசத்தை வாபீஸ் வாங்கிக் கொள்ள வேண்டியது. தவறினால் ஷையார்கள் பேரில் ரூபாய் இருநூறுக்கு மான நஷ்டு கேஸ் தொடரப்படும்.

சா. க. வ. சங்கரலிங்க நாடார்
ஏழாயிரம்பண்ணை.

## நோட்டீஸ்.

ஸ்ரீவைகுண்டம் தாலுகா முறப்பநாடு கோவில்பத்திலிருக்கும் துரைசாமிபிள்ளை மகன் கைலாசம் பிள்ளைஎன்பவர்இறந்துபோனசிதம்பரம் பிள்ளைக்கு ஷண்முகவேலு முதலியாரிடமிருந்து 21-10-26-ல் எழுதிக்கொடுத்து நோட்டின் பேரில்வரவேண்டிய தொகையை வசூலிக்கும் பொருட்டு தனக்கு வாரீஸ் சர்டிபிகேட் கொடுக்கவேணுமென்று தூத்துக்குடி சப்கோர்ட்டில் மனுதாக்கல் செய்தது O. P. 52 of 26 ஆகவைலாகி 17-11-26 க்கு வாய்தா போடப்பட்டிருப்பதால் ஷை விஷயமாய் ஆக்ஷேபனையுள்ளவர்கள் ஷை உயில் காலை 10-மணிக்கு ஷை கோர்ட்டில் வந்து ஆஜராகிதங்களுடைய ஆக்ஷேபனையை தெரியப்படுத்திக் கொள்ளலாம்.

A. C. பால்நாடார்,
B. A. B. L.
வக்கீல், தூத்துக்குடி: